
# திராவிடத்தால் வாழ்கிறோம்

864

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

67

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## பெரியாரின் மொழி ஆராய்ச்சி!

‘மக்கள் நீதி மையம்’ கட்சியின் தலைவர் கமல்ஹாசன் அண்மையில் திரைப்பட இசை வெளியீட்டு விழாவில் பேசும்போது, “தமிழில் இருந்து பிறந்ததுதான் கன்னடம்” என்று கூறினார். கர்நாடகாவில் உருப்பெற்று வந்த இந்தித் திணிப்புக்கு எதிரான களத்தை, தமிழ் VS கன்னடம் என மாற்றிட, கமல்ஹாசன் பேச்சை கருவியாகப் பயன்படுத்திக்கொண்டன பா.ஜ.க. உள்ளிட்ட சங் பரிவார் அமைப்புகள்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய தென்னிந்திய மொழிகள் அனைத்தும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பது இராபர்ட் கால்டுவெல் போன்ற மொழியியல் அறிஞர்கள் பலரின் கருத்து. இருப்பினும் கமல்ஹாசன் பேச்சு திட்டமிட்டு சர்ச்சைக்குள்ளாக்கப்பட்டு, விவாதமாக்கப் பட்டது.

இந்த விவாதங்களில், 02.02.1946, 09.02.1946 தேதியிட்ட ‘குடிஅரசு’ இதழ்களில் வெளியான பெரியாரின் ‘மொழி ஆராய்ச்சி’ கட்டுரையில் சொல்லப்பட்ட கருத்துகள் பலராலும் முன்வைக்கப்பட்டன. 26, 27-01-1946 ஆகிய தேதிகளில் நெல்லையில் நடைபெற்ற திராவிடர் கழக 3-வது மாவட்ட மாநாட்டில் பெரியார் ஆற்றிய உரைதான் அந்தக் கட்டுரை.

நெல்லை, டவுன் சந்தைப்பேட்டைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த பன்னீர்செல்வம் பந்தலில், இம்மாநாடு கூடியது. மணியம்மையார் கொடியேற்றி வைக்க, பெரியார் மாநாட்டைத் திறந்துவைத்தார். எ.வி.முத்தையா வரவேற்புரை யேற்றினார். டி.பி.வேதாசலம் மாநாட்டுக்குத் தலைமையேற்றார். மதிய உணவுக்குப்




பின்னர் சி.டி.நாயகம், சுப்பிரமணியம் பிள்ளை, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர் ஆகியோர் படங்களுடன் திராவிட நாட்டுப் படமும் திறந்து வைக்கப்பட்டது.

அதன்பிறகு, மாலையில் தேநீர் விருந்து, மாணவர் கழகத் திறப்பு விழா, பாளையங் கோட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் என வேறு சில நிகழ்ச்சிகளிலும் பெரியார் கலந்துகொண்டார். மீண்டும் மறுநாள் காலை 9.30 மணிக்கு மாநாடு தொடங்கியது.

அப்போது சிறுவராக இருந்த ஆசிரியர் கி.வீரமணி, ஏ.பி.ஜனார்த்தனம், பேராசிரியர் அன்பழகன், தவமணிராசன், சம்பத், பெரியார் ஆகியோர் பொதுவுடைமை, கருப்புச்சட்டையின் அவசியம், மாணவர் கடமை, கடவுள், மதம், சமகால அரசியல் என பல தலைப்புகளில் உரையாற்றினர்.

கட்டாயக் கல்விச் சட்டத்தை அமல்படுத்த வேண்டும், பாரதிதாசன் கவிதைகளைப் பாடத்திட்டத்தில் இணைக்க வேண்டும், கூலித் தொழிலாளிகளுக்கான 10 நாள் விடுமுறை என்ற அம்பேத்கர் திட்டத்தை மாகாண அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதல் நாள் மாநாட்டைத் திறந்து வைத்தபோது உரையாற்றிய பெரியார், “திராவிடர்கள், மொழிப்பிரிவைக் கொண்டு தங்களை வேறு வேறாகக் கருதிக்கொண்டு, ‘திராவிடர்கள்’ என்று சொல்லிக்கொள்ளவே சம்மதிக்க முடியாதவர்களாக இருக்கிறோம். உண்மையில், திராவிட மொழியில் பிரிவினை இருக்கின்றதா? திராவிட மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்பவைப் பிரித்துக்கொள்ளப்பட்ட, பிரிக்கப்பட்ட மொழிகளேயல்லாமல் கிளை மொழிகள் அல்ல. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்பவை யெல்லாம் தமிழேயாகும். நான்கு பாகத்திற்கும் போக்குவரத்துச் சாதனங்களும், அடிக்கடி சந்தித்து அளவளாவும் வாய்ப்பும் இல்லாததால் பேசிவந்த முறை சிறிது வேறுபட்டுள்ளது” என நீண்ட ஆய்வுரை நிகழ்த்தினார்.

பெரியார் மொழியியல் அறிஞர் அல்ல, ஆனால், 4 மொழிகளிலும் உள்ள ஒருமைப் பாடுகளை வைத்து, திராவிடர்களுக்குள் ஒற்றுமை வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக இருந்தது அவரின் உரை.

இறுதியில், ‘போர்வாள்’ நாடகத்துடன் மாநாடு கலைந்தது.

...கூட்டம் திரளும்

## தமிழ்நாடு அனுமதிக்காது!

‘திருப்பரங்குன்றம் பிரச்சினையில், மீண்டும் முருகன் மலையா, சிக்கந்தர் மலையா?’ என கலவர நோக்கத்தைத் தொடங்கி வைத்துள்ளார் உள்துறை அமைச்சர் அமித் ஷா. சிக்கந்தர் மலை என்று தி.மு.க. அரசு சொல்லாத ஒன்றை சொல்லியதற்கே அவர் மீது வழக்கு போடலாம் என சமூக வலைதளங்களில் கண்டனங்கள் எழுந்துள்ளன.

மதுரையில் உள்ள பல்வேறு மலைகளுக்கும் பல பெயர்கள் உண்டு என்பது மதுரை மக்களுக்குத் தெரியும். அவரது உரையில்,

“ஆயிரம் ஆண்டு பழமையை மீட்கவேண்டும்” என்று வரலாற்றையும் அறியாமல் பேசி இருக்கிறார் என சு.வெங்கடேசன் எம்.பி. கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

“பரங்குன்றம் என்பது மூவாயிரம் ஆண்டு பழமையான தமிழ்ச்சொல். அதனை ஆயிரம் ஆண்டு என சுருக்குவதில்தான் சனாதனத்தின் சதி இருக்கிறது.

சமஸ்கிருதத்தைப் பல்லாயிரம் ஆண்டுகள் என்று சொல்லிக் கொண்டே தமிழை ஆயிரம் ஆண்டுக்குள் அடக்குவதுதான், கீழடி துவங்கி திருப்பரங்குன்றம் வரை அவர்கள் நடத்திக் கொண்டிருக்கும் அரசியல்” என குறிப்பிட்டுள்ளார்.

சிந்து சமவெளி நாகரிகத்துடன் தொடர்புடைய கீழடி நாகரிகம் 2,500 ஆண்டுகளுக்கு முன்பானது என நிரூபித்தும் அதை ஒப்புக்கொள்ள மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, ஆயிரம் ஆண்டு பழமையை மீட்கப் போகிறோம் என உ.பி.யில் அரங்கேற்றிய வரலாற்றுச் சிதைப்புகளை, தமிழ்நாட்டுக்குக் கொண்டுவர துடிக்கின்றனர். தமிழ்நாடு அனுமதிக்காது.

# ஃப்ளாஷ்பேக்



## கழகத்தில் இணைத்துக் கொண்ட தலைவர்!



வே.விக்ரமன்

1995-ஆம் ஆண்டு மே மாதம் 15-ஆம் தேதி கடலூர் மாவட்டம், நெய்வேலியில், முத்தமிழறிஞர் கலைஞர் கலந்துகொண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது. அன்று, அரசியல் சார்பற்ற ஹெச்.எம்.எஸ். (H.M.S.) தொழிற்சங்கத்தின் ஒரு பிரிவினர் சுமார் 1,000 பேர், கழகத்திலும், துணை அமைப்பான தொழிலாளர் முன்னேற்ற சங்கத்திலும் இணைந்தோம். அந்த சங்கத்தின் செயல் தலைவர் என்ற முறையில், பொதுக்கூட்டத்தில் பேச எனக்கு வாய்ப்பளிக்கப் பட்டது. நான் 15 நிமிடங்கள் பேசினேன்.

பின்னர் சிறப்புரையாற்றிய தலைவர் கலைஞர் அவர்கள், நான் பேசியதைக் குறிப்பிட்டு, நளன்-தமயந்தி கதையைக் கூறி எங்களை கழகத்தில் இணைத்துக்கொண்டார். அதன் தொடர்ச்சியாக 2003-ஆம் ஆண்டு முதல் தலைமைக் கழகப் பேச்சாளராகவும், கடந்த 15-வது கழக அமைப்புத் தேர்தலில் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தேர்வு செய்யப்பட்டு, கழகப் பணியாற்றி வருகிறேன்.

**– வே.விக்ரமன் எம்.ஏ.,**
**கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினர்,**
**தலைமைக் கழகச் சொற்பொழிவாளர், கடலூர் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

67

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## பேராசிரியரின் தொலைநோக்கு!

‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற மாபெரும் உறுப்பினர் சேர்க்கைத் திட்டத்தை, மதுரை பொதுக்குழுவில் அறிவித்திருக்கிறார் கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். இது கழகத்தை வலுப்படுத்த மட்டுமல்ல; தமிழ்நாட்டையும் ஓரணியில் திரட்டி, நம்மை நோக்கிவரும் ஆதிக்க சக்திகளின் சூழ்ச்சியை முறியடிக்கவும் இன்றியமையாதத் திட்டமாகும்.

1993-ஆம் ஆண்டு கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது விழுப்புரத்தில் நடைபெற்ற முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் அன்றைய கழகப் பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்கள் ஆற்றிய உரையினை ‘கழகமும் கலைஞரும்’ என்கிற தலைப்பில் தி.மு.க. இளைஞர் அணி நூலாக வெளியிட்டது.

இந்நூலில் கழகம் எத்தகைய பெருமை வாய்ந்த ஒன்று, அதன் வேர் முதல் தலை வரை ஜனநாயகம் எப்படி நீக்கமற நிறைந்திருக்கிறது, அத்தகைய பண்பை, பேரறிஞர் அண்ணா வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் எவ்வளவு கவனமாகக் கட்டமைத்தார் என்பதை உணர்வுபூர்வமாக பதிவு செய்திருப்பார் பேராசிரியர் அவர்கள்.




கழகம் மாபெரும் உறுப்பினர் சேர்க்கையை முன்னெடுக்க இருக்கும் நேரத்தில் அதில் ஈடுபடவிருக்கும் உடன்பிறப்புகள் அனைவரும் இந்நூலை வாசிப்பது, பொருத்தமான ஒன்றாக இருக்கும்.

இந்நூலில் கலைஞர் பற்றியும் கழகம் குறித்தும், பேராசிரியர் குறிப்பிடும்போது “இந்த இயக்கத்தைக் கலைஞரைத் தவிர வேறுயாரும் கட்டிக் காப்பாற்ற முடியாது. இந்த இயக்கத்தைத் தவிர, தமிழனுக்குத் தொடர்ந்து பணியாற்றக் கூடிய இயக்கம் வேறு இருக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால், தமிழனுக்கு ஒரு முன்னேற்றம், ஒரு வாழ்வு, ஒரு பெருமை தி.மு.கழகத்தால்தான் ஏற்பட முடியும்” என்று உணர்வு ததும்பக் குறிப்பிட்டுள்ளார்.

இயக்கத்தைக் காட்டிலும் தனிமனிதர் எவரும் பெரியவர் இல்லை என்பதையும், அதற்குச் சான்றாக ஈ.வி.கே.சம்பத் பிரிந்து சென்றபோது பேரறிஞர் அண்ணாவும், நாவலர் விலகி சென்றபோது முத்தமிழறிஞர் கலைஞரும் எவ்வாறு அதனை எதிர்கொண்டார்கள் என்பதை எடுத்துக்கூறி இருக்கிறார்.

ஒரு இயக்கத்தை ஒழிக்க நினைப்பவர்கள் முதலில் கைகொள்வது ஊடகப் பிரச்சாரத்தைத் தான். தோன்றிய காலம் முதல் அப்படி பல அவதூறுகளை, பொய்ப்புரட்டுகளை தி.மு. கழகம் உண்மைகளைக் கொண்டு எதிர்கொண்டுள்ளது; இன்றும் எதிர்கொண்டும் வருகிறது.

“இரண்டு ஏடுகளிலே தொடர்ந்து செய்தி போட்டு, இந்த இயக்கத்திற்கு முடிவு கட்டிவிட முடியாது. இன்னும் பத்து தேர்தலிலே தோற்றாலும், தி.மு.கழகம் தலை நிமிர்ந்து நிற்கின்ற இயக்கமாகத்தான் இருக்கும்” என்று இதனைக் குறிப்பிட்டு எழுதி இருக்கும் பேராசிரியரின் தொலைநோக்கை எண்ணி, வியக்காமல் இருக்க முடியவில்லை.

“முதலில் நான் மனிதன்... இரண்டாவதாக நான் அன்பழகன்.. மூன்றாவதாக ஒரு பகுத்தறிவாளன்.. நான்காவதாக அண்ணாவின் தம்பி.. ஐந்தாவது கலைஞரின் நண்பன்” என்று பேராசிரியர் ஏன் சொன்னார் என்பதை, இந்நூலைப் படிப்பவர்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

...வாசிப்போம்.

## மலரும் நினைவுகள் / கட்சிப் பொறுப்பும் அமைச்சரவையும்!

1920-ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாகாணத் தேர்தலில் நீதிக்கட்சி வெற்றிபெற்ற நிலையில், ஆட்சிப் பொறுப்பை நீதிக்கட்சித் தலைவர் சர்.பிட்டி தியாகராயர் ஏற்கவில்லை. கட்சி வேலைகளைத் தீவிரமாகக் கவனிக்க வேண்டிய பொறுப்பு இருந்ததால், முதல்வர் பொறுப்பை அவர் ஏற்காமல், அனுபவமும் போதிய நிர்வாகத் திறமையும் பெற்ற ஏ.சுப்பராயலு அவர்கள் தலைமையில், முதல் நீதிக்கட்சி அமைச்சரவையை அமைத்தார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.